**தலைப்பு 122 - காணி அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

காணி அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 செப்தெம்பர் 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் காணி அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்தோபர் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

……………………………………………………………..........................………………….

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

**……………………………………………………………..……**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**..........................................................................**

**1.6.1 வருமானம் பெறுவனவுகள்**

**...............................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................................ | ................................ | ............................. |
| அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட சேதனப் பசளை தயாரிப்பு செயற்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட 777,720 கிலோகிராம் பசளைகள் 01 கிலோகிராம் ரூபா 15 வீதம் கொழும்பு கொமேர்சல் பசளைக் கம்பனிக்கு விற்பனை செய்ததன் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 11,665,800 தொகையான விற்பனை வருமானம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கவேண்டிய நிலுவை வருமானம் தொடர்பான கூற்று (ஏசீஏ-1(i)) இன் மூலம் சமர்ப்பிக்கப்படவில்லை. | சேதனப் பசளை தயாரிப்பிற்கான செயற்திட்டத்தின் பசளைகள் வரையறுத்த கொழும்பு கொமேர்சல் பசளைக் கம்பனிக்கு விற்பனை செய்வதற்காக காணி மறு சீரமைப்பு ஆணைக்குழுவின் LRC சேதனப் பசளை செயற்திட்டத்தின் மூலம் 777.72 மெட்ரிக் தொன்களுக்காக 001 ஆம் இலக்க இன்வொயிஸ் 2021-12-31 ஆந் திகதி வழங்கப்பட்டது.அரசாங்க கணக்குகள் காசு அடிப்படையில் தயாரிக்கப்படுவதனால் 201-12-31 ஆந் திகதி வழங்கப்பட்ட இன்வொயிஸ் | மீளாய்வாண்டின் போது விற்பனை செய்த சேதனப் பசளைக்காக பெறவேண்டிய வருமானம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய நிலுவை வருமானம் தொடர்பான கூற்று (ஏசீஏ-1(i)) மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொடர்பான பணம் உரிய ஆண்டின் போது கிடைத்திருக்காததனால் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு முடியவில்லை. அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் இது வெளிப்படுத்தப்படவில்லை . | |

### 1.6.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்று (ஏசீஏ-06) மற்றும் CIGAS கணனி உள்ளீட்டின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் (BOS Report) உள்ளடக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்களின் பெறுமதிகளுக்கிடையே ரூபா 91,550 வித்தியாசம் காணப்பட்டது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு CIGAS Web Interface சிகாஸ் கணனி உள்ளீடுகளுக்கிடையே வித்தியாசம் இனங்காணப்பட்டதுடன் அரசாங்க கணக்குகள் திணைக்களம் உரிய சரிசெய்தலை 2022 சனவரி மாதம் மேற்கொண்டுள்ளது. | அமைச்சு கணக்கு மீதியை திறைசேரி அச்சுக் குறிப்புக்களுடன் ஒப்பிட்டு வித்தியாசத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற சேதனப் பசளை தயாரிப்பு செயற்திட்டத்திற்குத் தேவையான 05 களஞ்சிய நிலையங்களை நிர்மாணிப்பதற்காக தேசிய இயந்திர நிறுவனங்களுக்கு ரூபா 22,813,779 முற்பணம் மீளாய்வாண்டின் ஒக்தோபர் 05 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தும் உரிய பெறுமதி மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் தயாரித்த நடைமுறையற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் நடைமுறை வேலையின் (Work in Progress) கீழ் | தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் எந்த ஒரு நிர்மாணத்திற்கான கொடுப்பனவுக்காக Work in progress ஆக 2014 ஆம் ஆண்டிற்கான செலவு விடயத்தின் கீழ் செலவு செய்யும் போது மாத்திரம் சொத்துக்கள் பதியப்படலாம். சேதனப் பசளை செயற்திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்டதானது 122-01-03-2509 ஆம் இலக்க செலவு விடயமாகும். அதற்கிணங்க உரிய | கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் நடைமுறையற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டுவதற்குப் பதிலாக அமைச்சின் செலவாகக் காட்டப்பட்டிருந்தது. இச்செலவினை நடைமுறை வேலையாக கணக்கீடு செய்வதற்கு CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் வசதிகள் இல்லை என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணங்களின் செலவுகளை சொத்துக்களாக கணக்கீடு செய்யும் இயலுமை இல்லை. | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்களின் கீழ் விவசாய உபகரணமாக காட்டப்பட்டுள்ள ரூபா 30,200,495 பெறுமதியினை பசளை தயாரிப்பு செயற்திட்டத்தின் செலவு அறிக்கையுடன் ஒப்பீடு செய்த போது 06 வகையான சொத்துக்களின் மொத்தத்தில் ரூபா 4,483,650 குறைவு காணப்பட்டது. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சேதனப் பசளை செயற்திட்டத்தின் கணக்காளரினால் கையொப்பமிடப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் அச்சொத்துக்கள் நிதியற்ற சொத்துக்களின் கீழ் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளன. | அனுராதபுரம் காணி மறுசீரமைப்பு அதிகார சபையின் வலய உதவிப் பணிப்பாளரால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செலவு அறிக்கையின் பிரகாரம் உரிய வித்தியாசம் காணப்படுவதனால் கணக்குளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பத்தரமுல்ல காணி ஆணையாளர் நாயகத்தின் அதாவது இந்த அமைச்சு அமைந்துள்ள மிகிகத மெதுர கட்டிடத்தின் நான்காவது மாடியினை நிர்மாணிக்கும் முதலாவது கட்டிடத்திற்காக ரூபா 10,986,567 முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 21 ஆந் திகதிய மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்திற்கு (Central Engineering Consultancy Bureau) அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய பெறுமதி நடைமுறையற்ற சொத்துக்கள் பதிவேட்டில் நடைமுறைவேலையின் (Work in Progress) கீழ் பதிவுசெய்வதற்குப் பதிலாக அமைச்சின் ஒரு செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இச்செலவினை நடைமுறை வேலையாக கணக்கீடு செய்வதற்கு CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் வசதிகள் | இந்த முற்பணம் புதிய கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக அல்லாது காணப்படுகின்ற கட்டிடத்தினை மேம்படுத்துவதற்காக என்பதனால் செலவு விடயம் 2104 இன் கீழ் அல்லாது 2001 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவாகும். அதற்கிணங்க நடைமுறைவேலையாக (Work in Progress) கணக்கீடு செய்யும் இயலுமை இல்லை. மேம்படுத்துவதற்காக கொடுப்பனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அப்பெறுமதியை சொத்துக்கள் பெறுமதியுடன் சேர்த்து காட்டுதல் மேற்கொள்ளப்படலாம். | அமைச்சு அமைந்துள்ள மிகிதகத மெதுர கட்டிடத்தின் நான்காவது மாடியினை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் நடைமுறையற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

இல்லை என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்த ரூபா 428,118,160 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதம் அல்லது ரூபா 48,963,553 தொகையான சேமிப்பும், மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,987,400,000 தேறிய நிதி ஏற்பாட்டில் 23 சதவீதம் அல்லது ரூபா 699,261,648 தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் கொரோனா தொற்றுநோய் மீண்டும் அதிகரித்ததோடு நாட்டில் உருவாகிய நிலைமை மற்றும் உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்டமை ஆகிய தவிர்க்க முடியாத காரணங்களால் நிறுவனத்தின் நடவடிக்கைகள் வழக்கம் போல இடம்பெறாததனால் எதிர்பார்த்த வகையில் செலவு செய்வதற்கான இயலுமை கிடைக்கவில்லை. மேலும் 2021-08-28 ஆந் திகதிய MF/NB/07/CM/2021/163 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ரூபா 7,900,000 தொகையான நிதி ஏற்பாட்டினை சேமிப்பதற்கு இணங்கிக்கொள்ளப்பட்டது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு முழுமையாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்குவிதிகளுடனான இணக்கமின்மைச் சர்ந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| | நி.பி 104(3) மற்றும் (4) | நட்டங்கள் அல்லது சேதங்கள் சம்பந்தமாக முழுமையான அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படுமாகவிருந்தால் தொடக்க அறிக்கையினை உடனடியாக அனுப்பவேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையான 03 வாகன விபத்துக்கள் சம்பந்தமான தொடக்க அறிக்கையும் 8 வாகன விபத்துக்கள் சம்பந்தமான முழுமையான அறிக்கையும் மீளாய்வாண்டின் இறுதி வரை சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட கொவிட் 19 உலகளாவிய தொற்றுநோய் நிலைமை மற்றும் தனிமைப்படுத்தலின் காரணமாக அலுவலகங்களை மூடவேண்டி ஏற்பட்டமையும் பதவியணியினர்களை குழுக்களாக மட்டுப்பாட்டுடன் அழைக்க வேண்டி ஏற்பட்டமையும் காரணமாக உரிய பரீட்சிப்பிற்காக உத்தியோகத்தர்களை நியமித்தல் மற்றும் நியமித்த உத்தியோகத்தர்களின் வேலைப்பழுவின் காரணமாக பரீட்சிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்தற்கு தடை ஏற்பட்டது. உரிய பரீட்சிப்பு முடிவடைந்த உடன் அறிக்கையினை துரிதமாக சமர்ப்பித்தற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தாமதமின்றி பிரகாரம் அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | **அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ** | | | |

**அமைச்சு சுற்றறிக்கை**

..............................

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பிற்கும் பின்னர் 12 மாத கால எல்லையில் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் சம்பந்தப்பட்ட பிரதான திருத்தங்களின் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் 33 வாகனங்களுக்காக உரிய எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற கொவிட் 19 உலகளாவிய தொற்றுநோய் நிலைமை மற்றும் செலவுகளை முகாமைத்துவம் செய்ததன் காரணமாக எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்வதற்கு தடை ஏற்பட்டிருந்தது. 2022-01-31 ஆந் திகதியளவில் 02 வாகனங்களின் எரிபொருள் பரீட்சிப்பு இடம்பெற்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்க ளின் பிரகாரம் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்ப டுதல் வேண்டும். |
| (ii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018 (1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் பிரசைகள்/சேவைநாடுன ர் நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை ல. | 2021-12-29 ஆந் திகதியளவில் அமைச்சிற்குரிய பரிரசை/சேவைநாடுனர் நியதிச் சட்டத்தினை தயாரித்து அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பிரசைகள் நியதிச் சட்டத்தை காட்சிப்படுத்தும் இடத்தை தெரிவு செய்தல் மற்றும் அமைச்சின் கடமைகளில் இடம்பெற்ற மாற்றங்களின் காரணமாக தயாரிக்கப்பட்ட நியதிச்சட்டம் காட்சிப்படுத்தப்படாததுடன் தேவையற்ற செலவுகளை மட்டுப்படுத்துவதற்கு ஏற்பட்டதனால் பிரசைகள் நியதிச்சட்டம் அச்சிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசை/சேவை நாடுனர் நியதிச் சட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப் படுதல் வேண்டும். |
| (iii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணியினர்களுக்கா | செயலாற்றல் உடன்படிக்கை தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்க ளின் பிரகாரம் செயலாற்றல் உடன்படிக்கைக ளில் கையொப்பமிடப் |

| | | |
|---|---|---|
| | கவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிம்சவிய செயற்திட்டம் 2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்ததுடன் அதற்காக ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த கிரயம் ரூபா 5,635,684,728 ஆக இருந்தது. மேலும் இச்செயற்திட்டம் 18 மாவட்டங்களின் 68 பிரதேச செயலகப் பிரிவுகளில் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் வவுனியா, அம்பாறை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை ஆகிய 07 மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்திட்டம் 1998 இன் 21 ஆம் இலக்க உரிமையாண்மையை பதிவுசெய்யும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை 15 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. தற்பொழுது உங்களின் அறிக்கையில் குறிப்பிட்டவாறு ரூபா 5,635,684,728 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அரசாங்க மற்றும் தனியார் காணிகளில் 1.6 மில்லியன் காணித்துண்டுகளை அளவீடு செய்து புலனாய்வு செய்து இறுதி தீர்மானங்களானது 580,000 காணித்துண்டுகளுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் சட்டரீதியான 285,000 உரிமையாளர்களுக்கு மாத்திரம் சான்றிதழ் வழங்கப்பட்டது. அதற்கிணங்க இக்காலத்தில் செலவு செய்யப்பட்டுள்ள பணத்தை கவனத்திற்கு எடுத்துப் பார்க்கும் போது ஒரு உரிமையாண்மையைத் தீர்மானிப்பதற்காக ரூபா 9,717 செலவு செய்யப்பட்டுள்ளது. பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள் திருப்தி கொள்ள முடியாததனால் எதிர்காலத்தில் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை சமர்ப்பிப்பது தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு | பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் நாடு முழுவதும் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

வருகின்றது என குறிப்பிடலாம்.

## 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கொரிய கடன் உதவியின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்கும் 2023 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் காணித்தரவு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் காணி தகவல் சேவை முறைமையின் கீழ் அமுல்ப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் (ICTA) ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்ளல், தகவல் பகுப்பாய்வு மற்றும் தரவு அடிப்படையினைத் தயாரித்தல், இறுதட்டுக்கள் மற்றும் அதுசார்ந்த சேவைகளை பெறுகை செய்தல், முன்னோடி செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரை ஆரம்பிக்கப்படவில்லை. | கொரிய கடன் உதவியின் கீழ் இலங்கை நில அளவையாளர் திணைக்களத்திற்கு ஒரு வெளிநாட்டு கடன் செயற்திட்டத்தினைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை திட்டமிடப்பட்டிருந்தும் வெளிநாட்டு செயற்திட்டம் சம்பந்தமான பிரதான செயற்பாடுகள் நிதி அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும். இதுவரை இலங்கை அரசாங்கமும் கொரிய அரசாங்கமும் உரிய கடன் உடன்படிக்கையில் கையொப்பமிடப்படாததன் அடிப்படையில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும் உரிய செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தியதன் பின்னர் மேற்கொள்ளப்படவேண்டியிருந்த முறைமை பராமரிப்புச் செலவு அதிகரித்ததனால் இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டுமா என்பதனை அமைச்சு மேலும் கவனம் செலுத்தி வருகின்றது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | காணி அமைச்சின் 2021 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட உள்நாட்டு விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக புல் பயிர்ச் செய்கை, சோளப் பயிர்ச் செய்கை, மற்றும் ஏனைய பயிர்களை பயிர்ச் செய்கை செய்வதற்கு தேவையான காணிகள் தொடர்பான தகவல்கள் பிரதேச செயலக மட்டத்தில் இனங்காணப்பட்டிருந்தும் திட்டமிட்டவாறு இலங்கை முதலீட்டுச் சபையுடன் தொடர்பு கொண்டு பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையின் | 2021 ஆம் ஆண்டின் போது அந்த வேலைத்திட்டத்தின் கீழ் காணிகளை வழங்குவதற்கான சிபாரிசுகள் சுற்றுலா மற்றும் காணி அமைச்சிற்கு கிடைத்திருக்காததுடன் ஆரம்ப கட்டத்தின் கீழ் முதலீட்டாளர்களை உரிய பிரதேச செயலகப் பிரிவு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்தல் இடம்பெற்றிருந்தும் தொடக்க சந்தர்ப்பத்தின் போது தெரிவு செய்யப்பட்ட காணிகள் முதலீட்டாளர்களால் நிராகரிக்கப்படுதல், செயற்திட்டத்திற்கு இணக்கப்பாட்டினை வெளியிட்டிருந்தும் முதலீட்டாளர் | திட்டமிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் உரிய காணிகளை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, சில காணிகளின் வெளிக்கள பரீட்சிப்பிற்காக முதலீட்டாளர்கள் அனுமதியினை வேண்டியிருந்தும் காணி உரிமையினைக் கொண்டிருக்கும் நிறுவனம் அதற்கு இணங்கியிருக்காமை, வெளியாருக்கு வழங்குவதற்கு உரிய நிறுவனம் சிபாரிசுகளை வழங்கியிருக்காமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் அடிக்கடி நிறுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) | 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடான காணி சுவீகரிப்பு நடைமுறையினை அமுல்ப்படுத்துவதனை மிகவும் வினைத்திறனாக்கும் குறிக்கோளில் திருத்திய விண்ணப்பப் படிவமும் வழிகாட்டிக் கோவையும் தயாரிக்கும் செயற்பாடு முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டிக் கோவை வரைபாக்கப்பட்டுள்ளன. காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்ததன் பின்னர் வழிகாட்டிக் கோவையை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | திட்டமிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

.......................................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ..................................................... | ........................... | ............................. |
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் “இலங்கையில் விவசாயம், வணிகம், சுற்றுலா மற்றும் ஏனைய சேவைகளை உற்பத்திப் பிரிவினை பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு உற்பத்திகளில் ஈடுபடுவதனைப் போல அவ்வாறான தொடக்க வளங்கள் மற்றும் அரசாங்க உதவி இன்னும் கிடைக்காத இளைஞர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு காணி உரிமையை வழங்குவதன் மூலம் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் அதற்குத் தேவையான | இளைய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்க காணிகளில் முதலீடு செய்யும் சந்தர்ப்பத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் வட மாகாணத்தை தவிர்த்து 263 பிரதேச செயலகப் பிரிவுகளில் அமுல்ப்படுத்தப்பட்டதுடன் 419,135 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதுடன் அதன் மூலம் 100,000 பேர் வரையில் நேர்முகப் பரீட்சைக்காக முன்வந்து 50,000 பேர் வரையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். காணிகளை இனங்காணும் சிக்கல், நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமை முதலிய விடயங்களால் | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவன ரீதியான உதவிகளை வழங்குதல்” என்ற குறிக்கோள் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை 20,000 காணித்துண்டுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அதற்காக 402 காணித்துண்டுகள் அல்லது திட்டமிடப்பட்ட அளவில் 2 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் 20,000 காணித் துண்டுகளை பகிர்ந்தளிக்கும் திட்டத்தினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்த போதிலும் அதில் 1,098 நபர்களுக்காக காணித்துண்டுகள் 2022-07-31 ஆந் திகதியளவில் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி தாழ்நில அபிவிருத்தி, கிராமங்களை விரிவுபடுத்தல், நீர்ப்பாசன நடவடிக்கைகள் முதலியவாறான 11 துறைகளின் கீழ் காணிகளை சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அவற்றில் 07 துறைகளின் கீழ் மாத்திரம் காணிச் சுவீகரிப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதிவரை சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்ட 7383 ஹெக்டயர் காணிகளில் 707 ஹெக்டயர் காணிகள் அதாவது 10 சதவீதம் மாத்திரம் பொறுப்பேற்க்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க திட்டமிட்டவாறு அரசாங்கத்தின் தேவைக்காக காணிகளைப் பொறுப்பேற்பதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது. | இளைய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்க காணிகளை முதலீட்டு வாய்ப்பினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமானது வடமாகாணம் தவிர்ந்த 263 பிரதேச செயலகப் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டதுடன் 419,135 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அதன் மூலம் 100,000 நபர்கள் அளவில் நேர்முகப் பரீட்சைக்கு முன்வந்து 50,000 நபர்கள் அளவில் காணிகளை வழங்குவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். காணிகளை இனங்காணும் சிக்கல் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமை முதலிய விடயங்களால் 2021 ஆம் ஆண்டில் 20,000 காணித் துண்டுகளை பகிர்ந்தளிக்கும் திட்டத்தினை அடைந்து கொள்ள முடியாதிருந்த போதிலும் அவற்றில் 2022-07-31 ஆந் திகதி வரை 1,098 நபர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டிருந்தன.<br><br>இச்செயற்திட்டத்தினை ஆரம்பிக்கும் போது காணிகளை இனங்காணல் இடம்பெற்றிருக்காததுடன் பின்னர் இனங்காணப்பட்ட காணிகளும் தொழில் முயற்சியாளர்களின் செயற்திட்டங்களுக்கு பொருந்துவதில்லை என குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 செயற்திட்டங்களை நிரைவேற்றுவதில் தாமதங்கள்**

..........................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ..................................................... | ............................ | ........................ |
| (அ) | அரசாங்க அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக காணிகளை சுவீகரிப்பது தொடர்பான இழப்பீட்டுப் பணத்தினை தாமதமின்றி செலுத்துதல், மற்றும் தாமதத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டியுள்ள அதிக வட்டிப்பணத்தை குறைக்கும் குறிக்கோளுடன் சுவீகரிக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்காக காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டின் இறுதிவரை உரிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் வரைபு தயாரிக்கப்பட்டு சட்ட வரை வரைஞவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் சட்ட வரைஞருடனும் இது சம்பந்தமாக பல தடவைகள் கலந்துரையாடப்பட்டு தொடக்க அதிகாரச் சட்டத்தின் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. தொடக்க அதிகாரச் சட்ட வரைபுக்குரிய அவதானிப்புக்களை மீண்டும் சட்ட வரைஞருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தினை துரிதமாக திருத்தம் செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2019, 2020 மற்றும் மீளாய்வாண்டு தொடர்பாக காணிகளை சுவீகரிப்பதற்காக அமுல்ப்படுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கையில் இழப்பீட்டினைச் செலுத்தி வேலை முடிவுறுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 2 சதவீதத்திற்கு குறைந்த பெறுமதியை கொண்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது அமுலப்படுத்தப்பட்ட 9073 கோவைகளில் வேலை முடிவுறுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 13 மாத்திரமாகும். அதற்கிணங்க சவீகரிப்பு நடைமுறை சம்பந்தமாக ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு துரிதமாக காணி சுவீகரிப்பு நடவடிக்கையை முடிவுறுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த 9073 கோவைகள் முன்னைய பல ஆண்டுகளாக அமுல்படுத்தப்படுகின்ற கோவைகளாவதுடன் 2021 ஆம் ஆண்டின் போது மாத்திரம் அனைத்து காணிப் பகுதிகளுக்குமாக இழப்பீடும் வட்டியும் செலுத்தி அரசாங்கத்தின் உரிமையை பதிவு செய்து வேலை முடிவுறுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 13 ஆகும். ஒரு கோவையினுள் அதிக எண்ணிக்கையான காணித் துண்டுகள் காணப்படல், அனைத்து காணித்துண்டுகளுக்குமாக இழப்பீடும் வட்டியும் செலுத்தி முடிவுறுத்தும் வரை உரிய கோவைகளின் வேலைகள் முடிவடைந்த கோவையாக கருதப்படாமை, சுவீகரிக்கும் தகவல் அமைச்சுக்கு கிடைக்கும் நடைமுறையில் பலவீனம் காணப்படுகின்றமை, மற்றும் 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட சூழ்நிலை செயல்முன்னேற்றம் குறைவுக்கு | காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கையை துரிதமாக முடிவுறுத்துதல் வேண்டும். |

தாக்கமளித்திருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| அரசாங்க சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 02 வாகனங்கள் இந்த அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தும் உரிய வாகனங்களை பொறுப்பேற்று நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வருவதறங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | KQ-6211 மற்றும் JO-9536 ஆம் இலக்க வாகனங்கள் பௌதீகரீதியாக அமைச்சில் காணப்பட்டிருந்தும் அதன் உரிமை பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரிவிடம் காணப்படுவதனால் எங்களின் சொத்துக்களாக கணக்கீடு செய்யும் இயலுமை இல்லை. இந்த இரண்டு வாகனங்களும் 2021 ஆம் ஆண்டின் போது தலைப்பு 130 இன் கீழ் கணக்குகளில் அறிக்கையிடப்பட்டிருந்தது. | உரிய வாகனங்களை பொறுப்பேற்று நிதிக்கூற்றுக்களில் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| KV-0433 ஆம் இலக்க வாகனத்திற்கு மீளாய்வாண்டின் யூலை 19 ஆந் திகதி இடம்பெற்ற வாகன விபத்து சம்பந்தமாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு (ii) இன் கீழ் மற்றும் நி.பி 110 இன் பிரகாரம் நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | KV-0433 ஆம் இலக்க வாகனம் தற்காலிகமாக காணி ஆணையாளர் நாயக திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த விபத்து அந்த திணைக்களத்தில் இடம்பெற்றது. அச்சம்பவம் தொடர்பாக அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்காததுடன் மீண்டும் வாகனம் இந்த அமைச்சினால் பொறுப்பேற்க்கப்பட்டதன் பின்னர் நி.பி 104 இன் கீழ் தொடக்க விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நி.பி 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதியப்படுதல் வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |

| | ...................................................... | .............................. | ............................... |
|---|---|---|---|
| (அ) | சேதனப் பசளை செயற்திட்டம் சம்பந்தமாக மீளாய்வாண்டின் மே 25 ஆந் திகதி காணி அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 5/6/1/1/CM/21/iii ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக மீளாய்வாண்டின் யூன் 07 ஆந் திகதி கிடைத்த 21/0949/322/010 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இச்செயற்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட பசளைக்காக 1988 இன் 68 ஆம் இலக்க பசளைகள் அதிகாரச் சட்டத்தின் 2(1)(2) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பசளைகள் செயலகத்ரதிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பசளைகள் செயற்திட்டத்திடமிருந்து அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு 2021-12-07 ஆந் திகதி பசளை செயலகத்திகு விண்ணப்பங்களை அனுப்பி உரிய பசளை மாதிரிகளும் அந்த அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தும் இன்றுவரை உரிய பதிவு இலக்கமும் பசளை விற்பனை செய்யும் அனுமதிப்பத்திரமும் வழங்கப்படவில்லை. எவ்வாறாயினும் உரிய செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் நடைமுறைச் சாத்தியமின்மையும் பலவீனமும், எண்ணை விலை அதிகரித்தல் ஆகிய காணரங்களினால் போக்குவரத்துச் செலவு அதிகரித்தல், மூலப்பொருள் தட்டுப்பாடு, அவற்றின் விலை அதிகரித்தல், சேதனப் பசளையை பயன்படுத்துதல் முன்னுரிமைத் தேவைப்பாடாகக் காணப்பட்ட அரசாங்கத்தின் கொள்கை மாற்றமடைதல் ஆகிய காரணங்களின் அடிப்படையில் இந்த முன்னோடி செயற்திட்டம் தற்பொழுது நிறுத்தப்பட்டு அது தொடர்பான ஆதனம், உபகரணம் மற்றும் பசளை முப்படைகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அவர்களின் ஒரு செயற்திட்டமாக மேற்கொள்வதற்காக ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | 1988 இன் 68 ஆம் இலக்க பசளை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பசளை தயாரிப்பிற்காக அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு காணியை அல்லது அதில் தங்கியிருப்பவற்றை சுவீகரிப்பதற்காக 38 ஆம் பிரிவின் கீழ் ஒரு கட்டளையை வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற திகதிக்கு முன்னர் இழப்பீட்டுப் பணத்தை அந்த நபருக்கு அல்லது நீதி மன்றத்திற்கு செலுத்தப்படாத | சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயத்துடன் இணங்குகிறேன். சுவீகரிப்பு நடைமுறையானது பல நிறுவனங்களின் பங்களிப்புடன் செய்யப்படுவதுடன் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சுவீகரிப்பு முடிவடைவதற்கு நீண்டகாலம் எடுக்கும். அந்த தாமதத்தினால் அதிக அளவான வட்டிப் பணத்தை செலுத்தும் சந்தர்ப்பம் காணப்பட்டது.<br><br>காணிகளைச் சுவீகரிப்பதற்காக | சுவீகரித்தல் இழப்பீட்டினை செலுத்துதல் நடவடிக்கையை உரிண காலத்தில் பொருத்தமாக மேற்கொண்டு வட்டிக் கொடுப்பனவை குறைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பத்தில் உரிய கட்டளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து இழப்பீட்டினைச் செலுத்தும் திகதிவரை நிர்ணயிக்கப்பட்ட அளவில் வட்டியுடன் இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்த வேண்டிய போதிலும் அதிகாரச் சட்டத்திலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட மொத்த வட்டிப் பணம் ரூபா 1,206,317,960 இல் ரூபா 602,135,211 அல்லது 50 சதவீதம் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு முன்னர் காணிச் சுவீகரிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட வட்டி செலவாகும். | வட்டியை செலுத்த வேண்டியதாவது காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் இழப்பீட்டினைச் செலுத்துவற்கு முன்னர் காணியை பயன்படுத்தும் உரிமையை பொறுப்பேற்க்க வேண்டி ஏற்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் என்பதுடன் அத்தியவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அந்த நடைமுறையினை பின்பற்றுவது தொடர்பாக நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன. | |
| (இ) | சுவீகரிக்கப்பட் காணிக்காக இழப்பீட்டினை செலுத்துவதற்கு தேவையான ரூபா 2,513,476,724 நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் போது அமைச்சினால் மாவட்ட செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தும் உரிய நிதி ஏற்பாடு இழப்பீடு பெறுபவர்களுக்கு செலுத்தப்பட்டது என்பதற்கான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக உரிய தகவல்களை மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளதுடன் அத்தகவல்கள் தற்பொழுது கிடைத்துள்ளதனால் அது சம்பந்தமான ஒரு மீளாய்வு தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய பணம் இழப்பீட்டினைப் பெறுபவர்களுக்கு செலுத்தப்பட்டது என்பதற்கான உறுதிப்படுத்தல் மாவட்ட செயலகங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | 2012 ஆம் ஆண்டின் போது வேருஸ்ஸ ஆற்றினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் பொரலெஸ்கமுவ மடவேல்ல பாதைக்கும் பொரபன பாலத்திற்கும் இடையேயுள்ள கைவிடப்பட்ட தருசு நிலத்தில் ஒரு நீர்த் தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக பொரலெஸ் கமுவவெவே கங்கபடகும்புற, மூனமல்மத்த, கங்கபட ஓவிட, தெல்கஸ்க ஓவிட,யல்கும்புற ஆகிய காணிகளில் 98 ஏக்கர்கள் சுவீகரிக்கப்பட்டிருந்தன. உரிய சுவீகரிப்புக்கள் சம்பந்தமாக 1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் அதிகாரச் | காணிகளைச் சுவீகரிக்கும் உத்தியோகத்தர்களால் உரிமைப் பரீட்சிப்புக்களை நடாத்தி உரிமைகளை உறுதிப்படுத்தியதன் பின்னர் உரிமைகள் உறுதிப்படுத்திய காணித் துண்டுகளுக்காக இழப்பீட்டு வேண்டுதல் பத்திரம் அனுப்பிவைக்கும் தொடர் ஒழுங்கின் பிரகாரம் இந்த அமைச்சினால் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு நிதி ஏற்பாடு விடுவிக்கப்படும். அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கையை முடிவுறுத்தி துரிதமாக இழப்பீட்டினைச் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான அறிவுறுத்தல்கள் 2012 யூலை 16 ஆந் திகதியும் 38(அ) பிரிவின் கீழான உப நிறைவேற்றுக் கட்டளையானது 2013 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 1830/51 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தும் சுவீகரிக்கப்பட்ட முழுக் காணிகளுக்காகவும் இழப்பீடும் வட்டியுமானது சுவீகரிப்பு நடவடிக்கை பூர்த்திசெய்யப்படாமை, போதிளவு நிதி ஏற்பாடு கிடைக்காமை முதலிய காரணங்களின் அடிப்படையில் இதுவரை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மாத்தறை மாவட்டத்தின் தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவில் கந்துர மற்றும் தலல்ல கிராமங்களில் அமைந்துள்ள 10 ஏக்கர் 02 ரூட் 27.26 பேச்சர்ஸ் காணி கந்தர மீன்பிடி துறைமுகத்தை நிர்மாணிக்கபதற்காக பொறுப்பேற்பதற்கு காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களை வெளியிடுதல் மீளாய்வாண்டின் ஏப்ரல் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38 (அ) பிரிவின் பிரகாரம் உப கட்டளையானது 2022 பெப்ரவரி 10 ஆந் திகதிய 2266/51 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது. உரிய இழப்பீட்டுக் கொடுப்பனவுக்காக ரூபா 31,500,000 பணம் கடற்றொழில் அமைச்சினால் தெவிநுவர பிரதேச செயலகத்திற்கு மீளாய்வாண்டின் சனவரி 06 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை இழப்பீட்டினை பெறுவதற்கு தகமையுள்ளவர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை | கந்தர மீன்பிடி துறைமுகத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளதனால் அவசர தேவைப்பாட்டிற்காக 38(அ) உபகட்டளை வழங்கப்பட்டுள்ளதுடன் இன்றுவரை அதிகாரச் சட்டத்தின் 5 ஆவது வெளியீடும் வழங்கப்பட்டுள்ளது. சுவீகரிக்கம் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உரிமையினை உறுதிப்படுத்தும் மிகுதி நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காணிகளை சுவீகரிக்கும் நடைவடிக்கையை முடிவுறுத்தி துரிதமாக இழப்பீட்டினைச் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்காது பிரதேச செயலகத்தின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக இழப்பீட்டிற்காக செலுத்த வேண்டிய வட்டிப் பணம் அதிகரித்துள்ளது. | | |
| (ஊ) | இங்கினிமிடிய நீர்த்தேக்க செயற்திட்டத்திற்கான காணிகளைச் சுவீகரிப்பதற்காக சுவீகரித்தல் அதிகாரச் சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் உப கட்டளையானது 1984 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் 38 ஆண்டுகள் கடந்திருந்ததுடன் உரிய இழப்பீட்டுப் பணம் செலுத்துவதற்காக ரூபா 5,122,123 நிதி ஏற்பாட்டுப் பணம் 2014 ஆம் ஆண்டில் அமைச்சினால் நவகத்தேகம பிரதேச பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்டு 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அப்பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் 2022 பெப்ரவரி 21 ஆந் திகதிய NWG/LSD/1/ACQU1/1/6 ஆம் இலக்க நவகத்தேகம பிரதேச பொதுச் செயலாளரினால் வழங்கப்பட்ட கடித்தின் மூலம் இங்கினிமிடிய நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக காணிகளை சுவீகரிப்பதற்காக இழப்பீடு செலுத்த வேண்டிய காணித் துண்டுகளின் இலக்கங்களை இனங்காண முடியாது எனவும் அமைச்சிற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | ஒரு செயற்திட்டமாக அமுல்ப்படுத்தப்படுகின்ற காலத்திற்குள் வைப்புச்செய்யப்பட்டுள்ள பணமாகும். அது சம்பந்தமான தெளிவான தகவல்கள் இல்லாததனால் பொதுவைப்புக் கணக்கிலுள்ள நிதி ஏற்பாட்டினை ஈடுபடுத்தி இதுவரை இழப்பீடு செலுத்தாத காணிகளுக்காக இழப்பீட்டினைச் செலுத்துமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | உரிய காணிகளை சுவீகரிக்கும் நடைவடிக்கையை முடிவுறுத்தி துரிதமாக இழப்பீட்டினைச் செலுத்துதல் வேண்டும். |
| (எ) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 05 ஏக்கர் காணி காலி பத்தேகம தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தொழில்சார் பயிற்சி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக சுவீகரிப்பதற்குரிய காணி | 2000 ஆம் ஆண்டின் போது சுவீகரிப்பினை ஆரம்பித்து உரிய அமைச்சின் வேண்டுகோளின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டின் போது 38(அ) உபகட்டளை வழங்கப்பட்டு சுவீகரித்தலின் மிகுதி நடவடிக்கையானது பிரதேச செயலகங்களினால் | உரிய காணிகளை பறிமுதல் செய்யும் நடைவடிக்கையை முடிவுறுத்தி துரிதமாக இழப்பீட்டினைச் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் பிரிவு இலக்கம்02 இன் கீழ் அறிவுறுத்தலினை வெளியிடுதல் 2000 ஆம் ஆண்டின் போதும் பிரிவு இலக்கம் 38(அ) இன் கீழ் உப கட்டளை வழங்குதல் 2001 ஆம் ஆண்டின் போதும் இடம்பெற்றிருந்தது. ரூபா 8,000,000 பெறுமதியான இழப்பீட்டுப் பணத்தினைச் செலுத்துதல் 2020 ஒக்தோபர் 27 ஆந் திகதி வரை தாமதித்ததன் காரணமாக 19 ஆண்டுகளுக்காக 07 சதவீதப்படி ரூபா 10,790,740 தொகையான வட்டிப் பணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டது. | மேற்கொள்ளப்பட்டது. நி.பி 53 இன் கீழ் காணி அமைச்சின் இணைந்த நிதி ஏற்பாட்டின் மூலம் இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு 2010 ஆம் ஆண்டின் போது அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் பிரதேச செயலகத்தினால் இழப்பீட்டு விண்ணப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது என்பதனால் அதற்கு இடையிலான காலப்பகுதிக்காக வட்டியினை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. தற்பொழுது சுவீகரிப்பதற்காக அனைத்து இழப்பீடும் வட்டிப் பணமும் விடுவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | வலதர கனிஷ்ட வித்தியாலயத்திற்கான விளையாட்டு மைதானத்திற்காக காணியினை சுவீகரிப்பது தொடர்பாக டோரா ஜயசூரிய என்ற நபரின் 01 ஏக்கர் 03 ரூட் 34.5 பேச்சர்ஸ் காணியை பொறுப்பேற்குமாறு காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட அறிவித்தல் 2005 யூலை மாதத்தின் போது வெளியிடப்பட்டிருந்தும் 2005 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான 16 ஆண்டுகள் காலம் எடுத்திருந்த போதிலும் காணியை சுவீகரிக்கும் மிகுதி நடவடிக்கை எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. மேலும் உத்தேச காணி தற்பொழுதும் பாடசாலை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது என்பது 2018 பெப்ரவரி 05 ஆந் திகதி கல்வி அமைச்சு செயலாளர் வழங்கிய கடிதத்தின் மூலம் காணி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை. | 2005 ஆம் ஆண்டின் போது 02 ஆம் பிரிவு அறிவுறுத்தலினை வெளியிட்டு பறிமுதல் செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அதன் மிகுதி நடவடிக்கைகள் பல ஆண்டுகளாக இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டதனால் புதிய பறிமுதல் செய்யும் பிரேரணையை அனுப்புமாறு கல்வி அமைச்சிற்கும் உள்ளூராட்சி அமைச்சிற்கும் அடிக்கடி தெரிவிக்கப்பட்டது. இதுவரை புதிய சுவீகரிப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததனால் தற்பொழுது காணப்படுகின்ற சுவீகரிப்பினை செயற்பாடற்ற கோவையாக கருதி நடவடிக்கை எடுப்பதுடன் சுவீகரிப்பு பிரேரணையை சமர்ப்பிப்பதாக இருந்தால் புதிய சுவீகரிப்பாக மீண்டும் ஆரம்பிப்பதற்கான இயலுமை உள்ளது. | உரிய காணிகளை சுவீகரிக்கும் நடைவடிக்கையை முடிவுறுத்தி துரிதமாக இழப்பீட்டினைச் செலுத்துதல் வேண்டும். |

**4. மனிதவளங்கள் முகாமைத்துவம்**

**..........................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **......................................................** | **............................** | **.............................** |
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி அமைச்சின் அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கை 638 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியனியினர் எண்ணிக்கை 569 ஆக இருந்ததனால் 69 பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்ப்பட்டன. | 2021-12-31 இல் உள்ளவாறு வெற்றிடங்கள் காணப்பட்ட சிரேஷ்ட மற்றும் இரண்டாம் மட்டம் தொடர்பான பதவிகள் நாடளாவிய சேவைப் பதவி என்பதனால் அது சம்பந்தமாக அரசாங்க நிருவாக அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டது. இதுவரை நியமனம் செய்யப்படாது பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை பிற்போடுமாறு 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதனால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகரித்த பதவியணியினைத் திருத்தம் செய்வதற்கு அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அமைச்சு அங்கீகரித்த சிரேஷ்ட மட்டத்திலுள்ள 08 பதவகளின் 08 உத்தியோகத்தர்களினதும் மூன்றாம் மட்டத்திலுள்ள ஒரு பதவியின் ஒரு உத்தியோகத்தரினதும் இரண்டாம் மட்டத்திலுள்ள 05 பதவிகளின் 44 உத்தியோகத்தர்களினதும் ஆரம்ப மட்டத்திலுள்ள 02 பதவிகளின் 14 ஊழியர்களினதும் ஏனைய 02 பதவிகளுக்குரிய 02 ஊழியர்களினதும் வெற்றிடங்கள் காணப்பட்டன. | 2021-12-31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்ட சிரேஷ்ட மற்றும் இரண்டாம் மட்டம் தொடர்பான பதவிகள் நாடளாவிய சேவையின் பதவிகள் என்பதனால் அது சம்பந்தமாக அரசாங்க நிருவாக அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை நியமனம் செய்யப்படாது பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை பிற்போடுமாறு 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதனால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகரித்த பதவியினைத் திருத்தம் செய்வதற்கு அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |